**ஜூலை – 31**

# TNPSC துளிகள்

- சத்தீஸ்கரில் உள்ள பிலாஸ்பூரில் உள்ள SECL தலைமையகத்தில் உள்ள வசந்த் விஹார் மருந்தகம், கோல் இந்தியா நிறுவனத்தின் முழுக்க முழுக்கப் பெண்களால் இயக்கப் படுகின்ற முதல் மருந்தகமாக அதிகாரப்பூர்வமாகத் திறக்கப்பட்டது.
- தூத்துக்குடி விமான நிலையத்தின் புதிய முனையக் கட்டிடத்தைப் பிரதமர் திறந்து வைத்ததுடன், தமிழ்நாட்டில் 4800 கோடி ரூபாய் மதிப்புள்ளத் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.
- கல்லீரல் அழற்சியை ஏற்படுத்தும் ஹெபடைடிஸ் வைரஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் ஜூலை 22 முதல் ஜூலை 28 வரை ஹெபடைடிஸ் விழிப்புணர்வு வாரம் அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாடு செய்திகள்

## தமிழ்நாட்டில் நெல் கொள்முதல் - 45 லட்சம் டன்

**PADDY PROCUREMENT IN THE LAST 5 YEARS** (in lakh tonnes)


| Year | Cauvery delta | Non-Cauvery delta | Total |
|---|---|---|---|
| 2020-21 | 30.93 | 14.02 | 44.95 |
| 2021-22 | 29.37 | 13.91 | 43.28 |
| 2022-23 | 29.84 | 14.38 | 44.22 |
| 2023-24 | 25.52 | 9.44 | 34.96 |
| 2024-25* | 29 | 15.49 | 44.49 |

- தமிழ்நாடு நெல் கொள்முதலில் சாதனை ஒன்றைப் படைக்க உள்ளது.
- இது விரைவில் 45 லட்சம் டன் என்ற இலக்கைத் தொட உள்ளது.
- தற்போது வரையில், 44.49 லட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.
- தற்போது வரை, கொள்முதல் சாதனை என்பது 2020-21 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப் பட்ட 44.95 லட்சம் டன் ஆகும்.
- நம் மாநில அரசானது விவசாயிகளிடமிருந்து சராசரியாக தினமும் சுமார் 15,000 டன் கொள் முதல் செய்கிறது.
- ஒட்டு மொத்த அளவு இறுதியில் 47 லட்சம் டன் ஆகலாம்.
- தற்போதைய திமுக ஆட்சியானது, 2021-22 ஆம் ஆண்டில், 50 லட்சம் டன் இலக்கை நிர்ணயித்திருந்தது, ஆனால் அப்போது அந்த இலக்கினை அடைய முடியவில்லை.
- கடந்த காலத்தைப் போலவே, காவிரி டெல்டா பாசனத்தின் கீழ் வரும் 10 மாவட்டங்கள் மொத்தக் கொள்முதலில் சுமார் 30 லட்சம் டன்களுடன் மூன்றில் இரண்டு பங்கை வழங்கியுள்ளன.
- குறைந்தபட்ச ஆதரவு விலையாக, சுமார் 10,734 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.
- மத்திய அரசு அதிகாரிகளிடம் உள்ள தரவுகளின் படி, முதல் சுற்றில் (2024 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 2025 ஆம் ஆண்டு மார்ச் வரை) சுமார் 3.36 லட்சம் விவசாயிகள் 6,899 கோடி ரூபாயையும், பின்னர் சுமார் 1.95 லட்சம் விவசாயிகள் 3,835 கோடி ரூபாயையும்

பெற்று உள்ளனர்.

- மேலும், A தரத்தில் உள்ள மற்றும் பொதுவான வகைகளுக்கு மாநில அரசு முறையே குவிண்டாலுக்கு 130 மற்றும் 105 ரூபாய் வழங்கி வருகிறது.
- பெரும்பாலான கொள்முதல் ஆனது தமிழ்நாடு குடிமைப் பொருள் வழங்கல் கழகத்தால் கூட்டுறவு நிறுவனங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்படுகிறது.
- மீதமுள்ளப் பகுதியை தேசியக் கூட்டுறவு நுகர்வோர் கூட்டமைப்பு (NCCF) மேற் கொள்கிறது.
- இந்தக் கொள்முதலில் உழவர் உற்பத்தியாளர்கள் அமைப்புகள் (FPO) ஈடுபட வேண்டும் என்று நிபுணர்களிடமிருந்து பரிந்துரைகள் வந்துள்ளன.

## கோயில் நிதியின் மாற்று பயன்பாடு




- தமிழ்நாட்டில் கோயில் நிதியைக் கல்லூரிகள் கட்டுவதற்கு வேண்டிப் பயன்படுத்தும் பிரச்சினை குறித்து சமீபத்தில் ஓர் சர்ச்சை வெடித்தது.
- முதன்மையாக முந்தைய மதராஸ் மாகாணத்தில் உருவாக்கப்பட்ட 200 ஆண்டுகள் பழமையான இந்த மாதிரியானது, இன்று வரையில் தொடர்கின்ற ஒரு சட்டத்திலிருந்து அதன் வலிமையைப் பெறுகிறது.
- மேலும் இது தென்னிந்தியாவில் அதிக வரவேற்பைப் பெற்றுள்ளது.
- 1817 ஆம் ஆண்டு சமய அறக்கட்டளை மற்றும் இறையுரிமைப்பாடு ஒழுங்குமுறை மூலம், கிழக்கிந்திய நிறுவனம் சமய அறக்கட்டளைகளை ஒழுங்குபடுத்துவதைச் சார்ந்த ஆரம்பகாலச் சட்டப்பூர்வ கட்டமைப்பை அமைத்தது.
- 1858 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் இராணி இந்திய ஆட்சிப் பிரதேசங்களின் மீது நேரடி கட்டுப்பாட்டை ஏற்றுக் கொண்ட போது, சமய விவகாரங்களில் தலையிடுவதை பிரிட்டிஷ் அரசு கட்டுப்படுத்திக் கொள்ளும் என்று கூறி விக்டோரியா மகாராணி ஒரு பிரகடனத்தை வெளியிட்டார்.
- 1920 ஆம் ஆண்டில் நீதிக்கட்சி தேர்ந்தெடுக்கப்பட்டபோது, சமய நிறுவனங்களை அரசாங்கம் மேற்பார்வையிடும் கருத்தாக்கம் வடிவமாக்கப் பட்டது.
- நீதிக் கட்சி ஆட்சியாளர்களின் ஆரம்பகாலச் சட்ட தலையீடுகளில் ஒன்று '1922 ஆம் ஆண்டின் மசோதா எண் 12: இந்து சமய அறநிலையச் சட்டம்' என்பதாகும்.
- ஒரு கோவிலுக்கு வழங்கப்படும் நிதியை மதச்சார்பற்ற நோக்கங்களுக்காகப் பயன்படுத்த முடியுமா என்பதுதான் இங்குள்ள பிரச்சினையாகும்.

- இந்த விவகாரம் விவாதிக்கப்பட்டு, 1925 ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்ட போது தீர்க்கப் பட்டது.
- தற்போது நடைமுறையில் உள்ள சட்டம் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய துறைச் சட்டம், 1959 ஆகும்.
- இது உபரி நிதியை பயன்படுத்திக் கொள்ளும் அந்த விதியை தக்க வைத்துக் கொண்டு உள்ளது.
- 1959 ஆம் ஆண்டு சட்டத்தின் 36வது பிரிவு, சமய நிறுவனங்களின் அறங்காவலர்கள் இச்சட்டத்தின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள எந்தவொரு நோக்கத்திற்காகவும், வேண்டி ஆணையரின் முன் அனுமதியுடன், எந்தவொரு உபரி நிதியையும் வழங்க அனுமதிக்கிறது.
- சோழப் பேரரசு உச்சத்தில் இருந்த கி.பி 970 ஆம் ஆண்டு முதல், கோயில்கள் இறையாண்மை கொண்ட ஆட்சியாளர்களிடமிருந்து ஏராளமான நன்கொடைகளைப் பெற்றுள்ளன.
- கடந்த நூற்றாண்டில், மதராஸ் மாகாணத்திலிருந்து தோன்றிய சுயமரியாதை இயக்கம், கோயில்களை ஒழுங்குபடுத்துவதையும் அவற்றின் வளங்களை மேற்பார்வையிடுவதையும் சாதி எதிர்ப்பு மீதான சீர்திருத்தங்களின் ஒரு முக்கிய அம்சமாகக் கருதியது.
- இது இல்லாமல், 1936 மற்றும் 1947 ஆம் ஆண்டுகளில் கோயில் நுழைவுச் சட்டம் உருவாகியிருக்காது.
- இன்று, தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகியவை நீண்ட சட்டப் போராட்டத்திற்குப் பிறகு பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த அர்ச்சகர்களை அரசாங்கங்கள் நியமித்த சில மாநிலங்களில் அடங்கும்.

# தேசியச் செய்திகள்

## மக்களவையில் மின்னணு வழி வருகைப் பதிவு

- மக்களவை உறுப்பினர்கள் பல்லூடகச் சாதனத்தைப் பயன்படுத்தி சபையில் உள்ள தங்கள் இருக்கைகளிலிருந்து தங்கள் வருகையைக் குறிக்க வேண்டும்.
- இது 2025 ஆம் ஆண்டு பாராளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடரில் தொடங்கி உள்ளது.
- இதற்கு முந்தைய அமர்வு வரையில், மக்களவை உறுப்பினர்கள் பாராளுமன்றத்தின் முகவாயிலில் உள்ள ஒரு பதிவேட்டில் கையொப்பமிட்டனர்.
- மின்னணு முறைமையுடன் தங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு காலம் வழங்குவதற்காக வேண்டி இந்தப் பதிவேடு சிறிது காலம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.
- பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் அடையாள அட்டையைப் பயன்படுத்தி, உயிரியளவியல் (கட்டைவிரல் ரேகை) அல்லது PIN குறியீட்டினை உள்ளிடுவதன் மூலம், அந்தந்த பிரிவு இருக்கைகளில் சபைக்குள் தங்கள் வருகையைப் பதிவு செய்யலாம்.
- மாநிலங்களவையானது விரைவில் இந்தப் புதிய முறையைப் பின்பற்ற வாய்ப்புள்ளது.
- கடந்த ஆண்டு, சபாநாயகர் ஓம் பிர்லா, பாராளுமன்றத்தின் முகவாயிலில் உள்ள ஒரு மின்னணு வரைப்பட்டிகையில் டிஜிட்டல் பேனாவைப் பயன்படுத்தி சபையில் தங்கள் வருகையைக் குறிக்க உறுப்பினர்களுக்கு விருப்பத் தெரிவினை வழங்கியிருந்தார்.
- நேர்த்தியான முனையங்களில் நிறுவப்பட்ட MMD அமைப்பை அறிமுகப்படுத்தியதன்

மூலம் இது தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

- இவை ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரின் இருக்கையிலும் பாராளுமன்ற ஆவணங்கள் மற்றும் அன்றைய நிகழ்ச்சி நிரலை அணுகப் பயன்படுத்தப் பட்டன.
- பாராளுமன்றத்தின் முகவாயிலில் சில நேரங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் அதிகரிப்பதால், இந்த நடவடிக்கை நேரத்தை மிச்சப்படுத்தும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.
- பாராளுமன்ற அமர்வுகளின் போது தங்கள் தினசரி படித் தொகைகளைப் பெற பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் வருகையைக் குறிக்க வேண்டியது கட்டாயமாகும்.
- இருப்பினும், அமைச்சர்களும் எதிர்க்கட்சித் தலைவரும் வருகைப் பதிவில் கையொப்பமிட வேண்டிய அவசியமில்லை.




## 60 ஆண்டுகால நட்புறவு - இந்தியா மற்றும் மாலத்தீவுகள்




- இந்தியா மற்றும் மாலத்தீவு ஆகியவை தனது 60 ஆண்டுகால அரசுமுறை உறவுகளைக் கொண்டாடுகின்றன என்ற நிலையில் இது வரலாற்றைத் தாண்டிய ஒரு ஆழமான வேரூன்றிய உறவுகளைக் குறிக்கிறது.
- இந்தியாவானது, மாலத்தீவின் நெருங்கிய அண்டை நாடாகவும் பேரழிவுகள் மற்றும் பொருளாதார மீட்சியின் போது ஆதரவளிக்கின்ற ஒரு நம்பகமான கூட்டாளியாகவும் உள்ளது.

- அவற்றின் முக்கியத் திட்டங்களில் 4,000 சமூக வீட்டுவசதி சேவைகள், கிரேட்டர் மாலே இணைப்பு திட்டம், அட்டு சாலை மற்றும் ஹனிமாதூ விமான நிலைய மறுமேம்பாடு ஆகியவை அடங்கும்.
- மாலத்தீவின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக என்று இந்தியா 565 மில்லியன் டாலர் (தோராயமாக 5,000 கோடி ரூபாய்) கடன் வழங்குகிறது.

## பிரதான் மந்திரி விக்ஸித் பாரத் ரோஸ்கர் யோஜனா

- பிரதான் மந்திரி விக்ஸித் பாரத் ரோஸ்கர் யோஜனா 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 01 ஆம் தேதியன்று தொடங்கப்பட உள்ளது.
- இது 3.5 கோடிக்கும் அதிகமான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதையும், உற்பத்தித் துறையில் சிறப்புக் கவனம் செலுத்தி, உள்ளடக்கிய, நீடித்த நிலையான வேலைவாய்ப்பை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது இரண்டு ஆண்டுகளுக்கு 99,446 கோடி ரூபாய் மொத்த நிதி ஒதுக்கீட்டைப் பெற்று உள்ளது.
- இலக்கு வைக்கப்பட்ட வேலைவாய்ப்புகளில், சுமார் 1.92 கோடி பேர் முதல் முறையாக முறையான பணியாளர் வளத்தில் இணையும் தொழிலாளர்களாக இருப்பார்கள்.
- ஊழியர்களுக்கான அனைத்துக் கொடுப்பனவுகளும் ABPS (ஆதார் உடன் இணைக்கப் பட்ட கட்டண முறைமை) முறைமையைப் பயன்படுத்தி DBT (நேரடி பயன் பரிமாற்றம்) மூலம் மேற்கொள்ளப்படும்.




## உள்துறை அமைச்சகம் மற்றும் வடக்குத் தொகுதி அலுவலகம்

- ஆங்கிலேயர் காலத்து வடக்குத் தொகுதி அலுவலகத்திலிலிருந்து உள்துறை அமைச்சகம் மாற்றப்பட உள்ளது.
- இந்த அமைச்சகம் சுமார் 90 ஆண்டுகளாக இந்த முகவரியால் அறியப் படுகிறது.
- டெல்லியின் லுடியன்ஸ் பகுதியில் உள்ள ரைசினா மலைக்குன்றில் உள்ள புகழ்பெற்ற

வடக்குத் தொகுதி கட்டிடம் இனி மத்திய உள்துறை அமைச்சகத்தின் (MHA) அமைவிடமாக இருக்காது.

- புதிய அலுவலக வளாகத்திற்குக் குடிபெயர்ந்த முதல் நபர்களில் மத்திய உள்துறைச் செயலாளர் கோவிந்த் மோகன் ஒருவர் ஆவார்.
- இப்புதிய வளாகத்தில் உள்துறைக்கு 347 அறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
- இது டெல்லி ஜன்பத் பகுதியில் உள்ள பொதுவான மத்தியச் செயலக கட்டிடத்திற்கு (CCS - Common Central Secretariat) மாறுகிறது.
- அனைத்து அலுவலகங்களும் வடக்கு மற்றும் தெற்கு அலுவலகத் தொகுதிகளிலிருந்து வெளியேறியதும், இவை ஒரு அருங்காட்சியகமாக மாற்றப்படும்.
- 'யுகே யுகீன் பாரத் தேசிய அருங்காட்சியகம்' என்று பெயரிடப்பட்ட இது, சுமார் 25,000-30,000 கலைப்பொருட்களைக் காட்சிப்படுத்தும்.
- இது உலகின் மிகப்பெரிய அருங்காட்சியகங்களில் ஒன்றாக இருக்கும்.
- மத்திய விஸ்தா மறு மேம்பாட்டுத் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்தப் பொது மத்தியச் செயலக கட்டிடம் இருக்கும்.
- மத்திய அரசின் பல்வேறு அமைப்புகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு, ஒத்துழைப்பு மற்றும் கூட்டு இயக்கத்தினை மேம்படுத்துவதே CCS அமைப்பை உருவாக்குவதன் நோக்கமாகும்.
- இது உற்பத்தித் திறனை அதிகரிக்கும் என்பதோடு நகரத்தின் பல்வேறு பகுதிகளில் பரவியுள்ள அலுவலகங்களிலிருந்து ஆவணங்கள் மற்றும் அதிகாரிகளின் ஒரு தேவை அற்றப் பயணத்தைத் தவிர்க்கும்.
- வடக்கு தொகுதி மற்றும் தெற்குத் தொகுதி உள்ளிட்ட பிரிட்டிஷ் காலக் கட்டிடங்கள் பிரதமர் அலுவலகம் மற்றும் பாதுகாப்பு, உள்துறை, வெளியுறவு மற்றும் நிதி அமைச்சகங்கள் போன்ற முக்கிய நிர்வாக கட்டிடங்களைக் கொண்டுள்ளன.
- இந்த சிவப்பு மணற்கல்லாலான கட்டிடங்கள் பிரிட்டிஷ் கட்டிடக் கலைஞர் ஹெர்பர்ட் பேக்கரால் கட்டமைக்கப்பட்டு 1921 ஆம் ஆண்டில் திறக்கப்பட்டன.





## குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் 2025

- ஜக்தீப் தன்கர் 2025 ஆம் ஆண்டு ஜூலை 21 ஆம் தேதியன்று தனது பதவியை ராஜினாமா செய்தார்.
- அரசியலமைப்புப் பதவியில் ஓர் அரிய இடைக்காலக் காலியிடத்தை இது உருவாக்கியது.

- இந்தியத் தேர்தல் ஆணையம், அவரது ராஜினாமாவை அறிவிக்கும் வகையில் உள்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட அரசிதழ் அறிவிப்பைப் பெற்றுள்ளது.
- குடியரசுத் துணைத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான செயல்பாடுகளை இந்தியத் தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது.
- அது மாநிலங்களவையின் பொதுச் செயலாளர் P.C. மோடியை தேர்தல் அதிகாரியாக நியமித்தது.
- 324வது சரத்தின் கீழ், இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தலை நடத்த இந்தியத் தேர்தல் ஆணையம் கடமைப்பட்டுள்ளது.
- இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல், 1952 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப் படுகிறது.
- மேலும் அதற்கான விதிகள், 1974 ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் மற்றும் குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் விதிகளின் கீழ் வகுக்கப் பட்டுள்ளன.
- இதில் வேட்பு மனுவை முன்மொழிபவர்களாக குறைந்தது 20 வாக்காளர்களும், வழி மொழிபவர்களாக குறைந்தது 20 வாக்காளர்களும் இருக்க வேண்டும்.
- இந்த நோக்கத்திற்காக என்று நியமிக்கப்பட்ட எந்த நாளிலும், காலை 11 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை தேர்தல் அதிகாரியிடம் இது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- இதனை வேட்பாளரோ அல்லது அவரது முன்மொழிபவர்களோ அல்லது வழி மொழிபவர்களோ தாக்கல் செய்வார்கள்.
- இத்தேர்தலுக்கான பாதுகாப்பு வைப்புத்தொகை 15,000 ரூபாய் ஆகும்.
- ஒரு மரபின்படி, மக்களவைச் செயலாளர் அல்லது மாநிலங்களவைச் செயலாளர் ஒரு சுழற்சி முறையில் இதன் தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்படுகிறார்கள்.
- 2022 ஆம் ஆண்டில் நடைபெற்ற கடைசி குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலின் போது, மக்களவையின் செயலாளர் தேர்தல் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.
- மக்களவை/மாநிலங்களவைச் செயலகத்தின் இரண்டு மூத்த அதிகாரிகள் உதவித் தேர்தல் அதிகாரிகளாக நியமிக்கப்படுகிறார்கள்.
- குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் குழுவால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.
- இது தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களையும் உள்ளடக்கிய வகையில் மாநிலங்களவை மற்றும் மக்களவையின் அனைத்து உறுப்பினர்களையும் உள்ளடக்கியது.
- அவர்கள் தங்கள் விருப்பப்படி வாக்களிக்கச் சுதந்திரமாக வாக்களிப்பர் என்பதோடு அவர்கள் கட்சியின் கொறடாவினால் கட்டுப்படுத்தப்பட மாட்டார்கள்.
- குடியரசுத் துணைத் தலைவர் ஐந்து ஆண்டுகள் பதவி வகிக்கிறார்.
- குடியரசுத் துணைத் தலைவர் மாநிலங்களவைத் தலைவராகவும் உள்ளார்.
- இது நாட்டின் இரண்டாவது மிக உயர்ந்த அரசியலமைப்பு பதவியாகும்.
- இருப்பினும், அவரது பதவிக் காலம் முடிவடைந்த போதிலும், அவருக்குப் பின் அவரது பதவியினை ஒருவர் பொறுப்பேற்கும் வரை அவர் அப்பதவியில் நீடிப்பார்.
- குடியரசுத் துணைத் தலைவரின் மரணம், பதவி நீக்கம் அல்லது இராஜினாமா ஆகிய நிலைமைகளில், புதிய தேர்தலைத் தவிர வேறு எந்த நீட்டிப்பு முறையையும் அதற்கு அரசியலமைப்பு வழங்கவில்லை.
- அத்தகையதொருச் சூழ்நிலையில், மாநிலங்களவையின் துணைத் தலைவர் அவை நடவடிக்கைகளுக்குத் தலைமை தாங்கலாம்.

- இதனால், குடியரசுத் துணைத் தலைவர் பதவி விலகினால், தேர்தல் ஆணையம் உடனடியாக தேர்தலுக்கு அழைப்பு விடுக்க வேண்டும், ஏனெனில் அந்தப் பதவி காலியாக விடப்பட முடியாது.
- அரசியலமைப்பின் 66(1)வது சரத்தின் படி, குடியரசுத் துணைத் தலைவர் தேர்தல் "ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறையின்படி நடத்தப் படும், மேலும் அத்தகைய தேர்தலில் வாக்களிப்பு முறை இரகசிய வாக்கெடுப்பு மூலம் நடத்தப்படும்."
- "ஒற்றை மாற்று வாக்கு மூலம் விகிதாச்சாரப் பிரதிநிதித்துவ முறையின்படி" நடத்தப் படும் தேர்தல், ஒவ்வொரு வாக்காளருக்கும் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருக்கு இணையான பல விருப்பத் தேர்வுகள் இருப்பதைக் குறிக்கிறது.
- வெற்றி பெறும் வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்க தேவையான வாக்குகளின் ஒதுக்கீட்டைப் பெற வேண்டும்.
- இது செல்லுபடியாகும் வாக்குகளில் மொத்தம் 50% வாக்குகளுடன் கூடுதலாக 1 என்ற எண்ணிக்கையாகும்.
- பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு மாநிலச் சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்த வாக்குகளின் மதிப்பு வேறுபட்டிருக்கும் குடியரசுத் தலைவர் தேர்தலைப் போலல்லாமல் குடியரசுத் துணைத் தலைவர் தேர்தலில் அளிக்கப்படும் ஒவ்வொரு வாக்குக்கும் ஒரே மதிப்பில் தான் இருக்கும்.




# சர்வதேசச் செய்திகள்

## காங்கோ அமைதிக்கான தோஹா ஒப்பந்தம்

- காங்கோ ஜனநாயகக் குடியரசு (DRC) அரசாங்கமும், காங்கோ நதிக் கூட்டணியின் (Congo River Alliance) கீழ் உள்ள கிளர்ச்சிக் குழுவான மார்ச் 23 இயக்க அமைப்பும் (M23), கத்தாரின் நடுவண் சேவையுடன் தோஹாவில் கொள்கைகள் பிரகடனத்தில் கையெழுத்திட்டன.
- MONUSCO எனும் ஐக்கிய நாடுகளின் அமைதிப்படையினால் வரவேற்கப்பட்ட இந்த


ஒப்பந்தமானது, போர் நிறுத்தம் மற்றும் கூட்டு அமலாக்க நெறிமுறையை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- புலம்பெயர்ந்த மக்கள் தன்னார்வமாக, பாதுகாப்பாகத் திரும்பி வருவதை உறுதி செய்வதற்கும், மோதல் உண்டாவதற்கான மூலக்காரணங்களை நிவர்த்தி செய்வதற்கு உள்ளடக்கிய வகையிலான பேச்சுவார்த்தையினை ஊக்குவிப்பதற்குமான உறுதிமொழிகளை இது உள்ளடக்கியது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## உயர் அழுத்த மீச்சேர்ம சவ்வு





- உயர் அழுத்த கடல் நீர் உப்புநீக்கத்திற்கான உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட சிறிய நுண்துளை பல்லடுக்கு மீச்சேர்ம சவ்வைப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது.

- இது இந்தியக் கடலோரக் காவல்படையின் (ICG) கப்பல்களில் பயன்படுத்தப்படும்.
- இது கான்பூரில் உள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் ஆய்வகமான DMSRDE (பாதுகாப்புப் பொருட்கள் சேமிப்பகம் மற்றும் ஆராய்ச்சி & மேம்பாட்டு நிறுவனம்) என்ற அமைப்பினால் உருவாக்கப்பட்டது.
- இது நுண்துளை மீச்சேர்ம அடுக்குகளைப் பயன்படுத்தி உப்புகள் மற்றும் அசுத்தங்களை வடிகட்டுவதன் மூலம் கடல் நீரைச் சுத்திகரிக்க வடிவமைக்கப்பட்ட உயர் செயல்திறன் கொண்ட வடிகட்டுதல் சவ்வு ஆகும்.
- நுண்துளை கட்டமைப்பு ஆனது மேற்பரப்பின் பரப்பளவு மற்றும் அளவு தேர்ந்தெடுக்கும் தன்மையை அதிகரிக்கிறது.
- பல்லடுக்கு வடிவமைப்பு ஆனது மேம்பட்ட இயந்திர வலிமை, உப்பு வடிகட்டுதல் மற்றும் வேதியியல் எதிர்ப்புத் திறனை வழங்குகிறது.
- உப்பு நீக்கம் என்பது உப்புநீரில் இருந்து கரைந்த உப்புகள் மற்றும் பிற அசுத்தங்களை அகற்றி மனித நுகர்வு, வேளாண்மை அல்லது தொழில்துறைப் பயன்பாட்டிற்கு ஏற்ற புதிய, குடிக்கக் கூடிய வகையிலான நீரை உற்பத்தி செய்யும் செயல்முறையாகும்.
- தலைகீழ் சவ்வூடுபரவல் (RO) என்பது சவ்வு அடிப்படையிலான நீர் சுத்திகரிப்பு செயல் முறையாகும், இதில் உப்பு நீர் அதிக அழுத்தத்தின் கீழ் பகுதியளவு ஊடுருவக்கூடிய சவ்வுகள் வழியாக செலுத்தப்படுகின்றன.
- இது கரைந்த உப்புகள், தாதுக்கள் மற்றும் அசுத்தங்களைத் தடுத்து, நீர் மூலக் கூறுகளை மட்டுமே கடந்து செல்ல அனுமதிக்கிறது.

## திரவ கார்பனின் கட்டமைப்பு

- அறிவியலாளர்கள் சீரோளிக் கற்றைகள் (லேசர்கள்) மற்றும் ஊடு கதிர்களைப் பயன்படுத்தி தீவிர வெப்பம் மற்றும் அழுத்தத்தின் கீழ் உருவாகின்ற திரவ கார்பனை ஆய்வு செய்தனர்.
- அணு கட்டமைப்பு ஆனது ஒரு எளிய திரவத்தைப் போலலல்லாமல், வைரத்தின் கட்டமைப்பினை ஒத்திருப்பது இதுவரையுள்ள நமது புரிதலை மறுவடிவமைக்கிறது.
- இந்தக் கண்டுபிடிப்பு கிரகங்கள் மற்றும் அணுக்கரு இணைவு உலைகளில் காணப் படும் சூழல்களின் கீழ் கார்பனின் நடத்தையை வெளிக் கொணர்வதன் மூலம் கிரக அறிவியல், இணைவு ஆற்றல் ஆராய்ச்சி மற்றும் பொருள் அறிவியலுக்கு உதவுகிறது.
- திரவ கார்பன் என்பது சாதாரண வெப்பநிலை மற்றும் அழுத்த நிலைமைகளின் கீழ் இயற்கையாகவே நிலையானதாக இல்லாத திரவ நிலையில் உள்ள கார்பனைக் குறிக்கிறது.
- கார்பன் என்பது பொதுவாக கிராஃபைட், வைரம் போன்ற திட வடிவங்களில் அல்லது ஆக்ஸிஜனேற்றப் படும் போது வாயுவாக ($CO_2$) உள்ளது.
- கார்பன் சாதாரண அழுத்தத்தின் கீழ் உருகாது; மேலும் இது திடப்பொருளிலிருந்து வாயுவாக (பதங்கமாதல்) நேரடியாக மாறுகிறது என்பதால் இது ஆய்வக அடிப்படையிலான திரவ கட்ட ஆய்வுகளை மேற்கொள்வதை கிட்டத்தட்ட சாத்தியம் அற்றதாக்குகிறது.
- திரவ கார்பனை உருவாக்க, பூமியின் வளிமண்டலத்தை விட 10 மில்லியன் மடங்கு அதிகமான அழுத்தங்கள் மற்றும் 4,500°C வெப்பநிலை போன்ற தீவிர நிலைமைகள் தேவைப்படுகின்றன.
- எந்தப் பொருளும் உருகாமல் இந்த சூழ்நிலைகளைத் தாங்க முடியாது என்பதால் வழக்கமான முறைகள் தோல்வியடைகின்றன.

- திரவ கார்பன் அணுக்கள் ஒவ்வொன்றும் வைரத்தின் அமைப்பைப் பிரதிபலிக்கின்றன (ஆனால் திரவ வடிவத்தில்), மேலும் 4 அண்டை அணுக்களைக் கொண்டுள்ளன.
- இது எளிமையான திரவ அமைப்பின் முந்தைய அனுமானங்களுக்கு சவால் விடுக்கிறது.
- சகப் பிணைப்புகளுடன் நீரின் ஹைட்ரஜன் பிணைக்கப்பட்ட வலையமைப்பைப் போன்ற இந்த அமைப்பானது சிக்கலானது மற்றும் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.
- இந்தச் சோதனையானது அதிக அழுத்தத்தின் கீழ் கார்பனின் உருகுநிலையைக் குறைத்து, முந்தைய தத்துவார்த்த மாதிரிகளில் உள்ள முரண்பாடுகளைத் தீர்த்தது.
- திரவ கார்பன் மாபெரும் கிரகங்களின் மையங்களில் (எ.கா., நெப்டியூன், யுரேனஸ்) மற்றும் வெண்ணிற குள்ள நட்சத்திரங்களில் உள்ளது.
- அதன் நடத்தையைப் புரிந்து கொள்வது கிரக உருவாக்கம் மற்றும் இயக்கவியலின் மாதிரிகளை மேம்படுத்துகிறது.
- செயலற்ற கட்டுப்படுத்தப்பட்ட இணைவு (ஒரு தூய்மையான ஆற்றல் கருத்து) கார்பன் நிறைந்த பொருட்களைப் பயன்படுத்துகிறது.
- கார்பனின் திரவ பண்புகளை அறிவது செயல் திறம் மிக்க உலைகளை வடிவமைக்க உதவுகிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## நீண்ட அலகு கொண்ட புதர் கதிர்க்குருவி

- லடாக்கின் சுரு பள்ளத்தாக்கில் நீண்ட அலகு கொண்ட புதர் கதிர்க்குருவி தென்பட்டது.
- 46 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியாவில் முதன்முறையாக இந்தப் பறவை இருப்பதை உறுதிப் படுத்தப் பட்டதை இது குறிக்கிறது.
- இது அதன் நீண்ட அலகு மற்றும் வால் ஆகியவற்றிற்குப் பெயர் பெற்றது என்பதோடு, இது மிகவும் அரிதாகவே வெளித் தோன்றும் மற்றும் பொதுவாக 2,400–3,600 மீட்டர் இடையேயான பனிப்படர்ந்த புல்வெளி சரிவுகளில் வாழ்கிறது.
- இந்தப் பறவை IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் அச்சுறுத்தல் நிலையை

அண்மித்த இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.




## ராம்சர் COP15





- ஈரநிலங்கள் மீதான ராம்சர் உடன்படிக்கைக்கான ஒப்பந்ததார நாடுகளின் 15வது மாநாடு (COP15) ஜிம்பாப்வேயின் விக்டோரியா நீர்வீழ்ச்சி பகுதியில் நடைபெற்றது.
- மொத்தம் 172 நாடுகள் இந்த மாநாட்டில் பங்கேற்றன.
- இந்த மாநாட்டின் கருத்துரு, "Protecting Wetlands for Our Common Future" என்பதாகும்.
- ஜிம்பாப்வே நாடானது ராம்சர் உடன்படிக்கையின் மூன்று ஆண்டு கால சுழற்சி முறை தலைமைப் பொறுப்பை சீனாவிடமிருந்து அதிகாரப்பூர்வமாக ஏற்றுக் கொண்டது.
- உலகளாவிய ஈரநில மறுசீரமைப்பு முயற்சிகளை ஊக்குவிப்பதற்காக விக்டோரியா நீர்வீழ்ச்சி பிரகடனம் தொடங்கப்பட்டது.
- ஈரநிலங்கள் ஆனது பூமியின் மேற்பரப்பில் 6 சதவீதத்தை மட்டுமே உள்ளடக்கி

இருந்தாலும், அதன் சேவைகள் உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 7.5 சதவீதத்திற்கும் அதிகமாக மதிப்பிடப்படுகிறது.

- 2025 ஆம் ஆண்டு உலகளாவிய ஈரநிலக் கண்ணோட்ட அறிக்கையின் சிறப்பு பதிப்பு ஆனது, 2050 ஆம் ஆண்டிற்குள் உலகின் மீதமுள்ள ஈரநிலங்களில் ஐந்தில் ஒரு பங்கு மறைந்துவிடும் என்று எச்சரித்தது.
- இந்த இழப்பு சுமார் 39 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் (USD) என மதிப்பிடப்பட்ட சுற்றுச்சூழல் அமைப்பு சார்ந்த சேவை இழப்புகளுக்கு வழிவகுக்கும்.
- இந்தியா தற்போது 1.36 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவிலான 91 ராம்சர் தளங்களைக் கொண்டுள்ளது.
- இது ஆசியாவின் மிகப்பெரிய மற்றும் உலகின் மூன்றாவது பெரிய பாதுகாக்கப்பட்ட ஈரநில வலையமைப்பை உருவாக்குகிறது.
- கூடுதலாக, இந்தூர் மற்றும் உதய்ப்பூர் ஆகியவை ஈரநில நகரங்களாக புதிதாக அங்கீகரிக்கப் பட்டுள்ளன.
- இந்தியாவின் குடிமக்கள் பங்கெடுப்பு வகையிலான முயற்சிகளான சஹ்பாகிதா திட்டம் மற்றும் சேவ் வெட்லேண்ட்ஸ் பிரச்சாரம் ஆகியவை ஈரநில விழிப்புணர்வு மற்றும் வளங்காப்பிற்காக இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்களைத் திரட்டி உள்ளன.
- COP15 உலகளாவிய ஈரநில மறுசீரமைப்பு நிதியை உருவாக்குவதற்கும், தேசியப் பருவநிலை மற்றும் மேம்பாட்டுச் செயல்பாட்டு நிரல்களில் ஈரநிலக் கொள்கைகளை வலுவாக ஒருங்கிணைப்பதற்கும் அழைப்பு விடுத்தது.
- நீண்டகாலப் பாதுகாப்பு இலக்குகளை முன்னெடுத்துச் செல்ல ஆப்பிரிக்கா, ஆசியா, அமெரிக்கா, ஐரோப்பா, ஓசியானியா மற்றும் கரீபியன் உள்ளிட்ட பிராந்திய குழுக்களின் உள்ளீடுகளுடன் உத்தி சார் திட்டம் 2025–2034 விவாதிக்கப்பட்டது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## நிலையான மேம்பாட்டு இலக்குகள் அறிக்கை 2025




- இது ஐ.நா. சபையின் 10வது நிலையான மேம்பாட்டு இலக்குகள் அறிக்கை (2025) ஆகும்.
- இது ஐ.நா. சபையின் பொருளாதார மற்றும் சமூக விவகாரத் துறையால் (UN DESA) தயாரிக்கப் பட்டது.
- அளவிடக்கூடிய SDG இலக்குகளில் 35% தேக்கமடைந்து அல்லது தலைகீழாக மாறி

வருவதாகவும், 2030 ஆம் ஆண்டு என்ற இலக்கு ஆண்டினை அடைய இன்னும் ஐந்து ஆண்டுகளே மீதமுள்ள நிலையில் இருப்பதாகவும் அது எச்சரிக்கிறது.


❖ அளவிடக்கூடிய தரவுகளுடன் கூடிய 17 இலக்குகளில் 14 இலக்குகள் சுமார் 35 சதவீதம் நிறுத்தப்பட்டுள்ளன அல்லது பின்னோக்கி நகர்கின்றன.

❖ இந்த அறிக்கையின் கண்டுபிடிப்புகள், பட்டினி நிலையற்ற நிலை (SDG2), தரமான கல்வி (SDG4), தூய்மையான நீர் மற்றும் சுகாதாரம் (SDG6), முறையான வேலை மற்றும் பொருளாதார மேம்பாடு (SDG8) மற்றும் குறைக்கப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் (SDG10) போன்ற ஐந்து முக்கியமான இலக்குகளுக்கு குறிப்பாக எச்சரிக்கை அளிக்கக் கூடியதாக உள்ளன என்பதோடு இதில் தரவுகளுடன் கூடிய இலக்குகளில் சுமார் 50-57 சதவீதம் தேக்கமடைந்துள்ளன அல்லது மோசமடைந்துள்ளன.

❖ பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி (SDG12), நீரடி உயிரினங்கள் (SDG14), நில வாழ் உயிரினம் (SDG15), மற்றும் அமைதி, நீதி மற்றும் வலுவான நிறுவனங்கள் (SDG16) – ஆகிய நான்கு பிற இலக்குகளும் சிறப்பாகச் செயல்படவில்லை, அவற்றின் அளவிடக் கூடிய இலக்குகளில் 40 முதல் 42 சதவீதம் வரை அதற்கான பாதையில் செல்லவில்லை.

❖ அதன் மக்கள்தொகையில் 23.2 சதவீதம் பேர் பட்டினி நிலையை எதிர்கொண்டுள்ளது என்பதுடன் ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியில் மிகவும் உயர்ந்த விகிதம் காணப் பட்ட அதே நேரத்தில் 281 மில்லியன் பேர் பட்டினி நிலையில் உள்ளதுடன் தெற்காசியா மிகப்பெரிய அளவில் முழுமையான பட்டினி நிலையில் உள்ள மக்களின் எண்ணிக்கையைக் கொண்டுள்ளது.

## RPGC அறிக்கை 2025




❖ சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை (IRENA) ஆனது 2025 ஆம் ஆண்டு புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி செலவுகள் (RPGC) அறிக்கையினை வெளியிட்டது.

❖ புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களின் வளர்ந்து வரும் செலவு பயன் திறனை இந்த அறிக்கை எடுத்துக்காட்டுகிறது.

❖ 2024 ஆம் ஆண்டில், உலகளாவிய புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி திறன் சேர்த்தல்கள் 582 ஜிகாவாட்களை (GW) எட்டின.

❖ இதில் சூரிய ஒளிமின்னழுத்தங்கள் (PV) 452.1 GW (77.8%) மற்றும் காற்றாலை 114.3 GW பங்களிக்கிறது.


❖ 2024 ஆம் ஆண்டில், புதிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்களில் சுமார் 91% ஆனது உலகளவில் மலிவான புதைபடிவ எரிபொருள் அடிப்படையிலான மாற்றுகளை விட குறைந்த செலவில் மின்சாரத்தினை வழங்கின.

- சூரிய PV புதைபடிவ எரிபொருட்களை விட சராசரியாக 41% மலிவானது.
- 2024 ஆம் ஆண்டில் 582 GW புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தித் திறன் சேர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கச் செலவு சேமிப்புக்கு வழிவகுத்தது என்பதோடு இது தோராயமாக 57 பில்லியன் டாலர் மதிப்புள்ள புதைபடிவ எரிபொருள் பயன்பாட்டைத் தவிர்த்தது.

## உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான குடிசைப் பகுதிகள்

- 2024 ஆம் ஆண்டு மூடிஸ் அமைப்பின் அறிக்கையின்படி, ஒவ்வோர் ஆண்டும் சுமார் 2.3 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் வெள்ளத்தால் பாதிக்கப்படுகின்றனர்.
- இந்த ஆய்வு 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் நேச்சர் சிட்டிஸ் என்ற இதழில் வெளியிடப் பட்டது.
- இந்தியாவில், 600 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கடலோர அல்லது நதி சார் வெள்ளத்தினால் பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளனர்.
- வெள்ளத்தால் பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் உலகிலேயே அதிக எண்ணிக்கையில் ஆன குடிசைப் பகுதிகள் இந்தியாவில் உள்ளன.
- இந்தியாவில் சுமார் 158 மில்லியனுக்கும் அதிகமான குடிசைவாசிகள் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்படக் கூடிய குடியிருப்புகளில் வாழ்கின்றனர்.
- இது ரஷ்யாவின் மக்கள்தொகையை விட அதிகம் ஆகும் .
- மேலும் அவற்றுள் பெரும்பாலானவை கங்கை நதி டெல்டாவில் குவிந்து உள்ளன.
- அத்தகைய மக்கள்தொகையில் மிகப்பெரியதான செறிவும் அதிக எண்ணிக்கையும் தெற்காசிய நாடுகளில் உள்ளன.
- முழுமையான எண்ணிக்கையில் வட இந்தியா முன்னணியில் உள்ளது.
- அதைத் தொடர்ந்து இந்தோனேசியா, வங்காளதேசம் மற்றும் பாகிஸ்தான் உள்ளன.
- மற்ற குறிப்பிடத்தக்க அளவில் 'அதிகம் பாதிக்கப்படும் பகுதிகளில்' ருவாண்டா மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகள், வடக்கு மொராக்கோ மற்றும் ரியோ டி ஜெனிரோவின் கடலோரப் பகுதிகள் அடங்கும்.
- உலகளாவிய தெற்குப் பகுதியில், 67,568 தொகுப்பு/திரள்களின் 908,077 வீடுகளில் வசிக்கும் சுமார் 445 மில்லியன் மக்களை உள்ளடக்கிய குடியிருப்புகள் ஒட்டு மொத்த அளவில் 33% முறைசாரா குடியேற்றங்கள் ஆகும்.
- அவை ஏற்கனவே வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ளன.
- இந்தியா மற்றும் பிரேசில் போன்ற நாடுகளிலும் விகிதாச்சாரத்தில் அதிக எண்ணிக்கையிலான வெள்ளப்பெருக்கு குடியிருப்புகள் உள்ளன.
- இங்கு ஆராய்ச்சியாளர்கள் கிராமப்புறம், புறநகர் மற்றும் நகர்ப்புறம் என மனிதக் குடியிருப்புகளை வகைப்படுத்தினர்.
- இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் நாடுகள் மிகவும் அதிக நகரமயமாக்கல் விகிதங்களை (80%) கொண்டிருந்தன.
- இதனால், 60 சதவீதத்திற்கும் மேற்பட்ட குடியேற்றங்கள் நகர்ப்புறங்களில் இருந்தன.
- இதற்கு மாறாக, ஆப்பிரிக்காவின் துணை-சஹாரா பகுதியில் மிகக் குறைந்த நகரமயமாக்கல் விகிதங்கள் இருந்தன என்பதோடு மேலும் சுமார் 63% முறைசாரா குடியேற்றங்கள் அங்கு கிராமப்புறங்களாக இருந்தன.
- சியரா லியோன் மற்றும் லைபீரியாவில் உள்ள முறைசாரா குடியேற்றங்கள் பெரும்பாலான மக்களைக் கொண்டிருந்தன.

- இந்தியாவில், ஆய்வின் போது, 40% குடிசைவாசிகள் நகர்ப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் வசித்து வந்தனர்.
- இந்தியா மற்றும் வங்காளதேசத்தில், தாழ்வான கங்கை டெல்டா மற்றும் பெரிய அளவிலான தேசிய மக்கள் தொகை இந்த எண்ணிக்கைக்குப் பங்களிக்கின்றன.
- வேலை வாய்ப்பு, சமூகப் பாதிப்புகள் மற்றும் நிதிக் கட்டுப்பாடுகள் உள்ளிட்ட பல காரணிகளால் மக்கள் வெள்ளப்பெருக்குப் பகுதிகளில் குடியேறுகிறார்கள் அல்லது குடியேற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.




## மாநிலச் செய்திகள்


### இந்தியாவின் இரண்டாவது மிக நீளமான கம்பிவட தாங்கு பாலம்




- மத்திய சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் இந்தியாவின் இரண்டாவது மிக நீளமான கம்பிவட தாங்கு பாலமான சிகந்தூர் பாலத்தைத் திறந்து வைத்தார்.

- இது கர்நாடகாவின் சிவமோகா மாவட்டத்தின் சாகர் தாலுக்காவில் ஷராவதி உப்பங் கழியின் குறுக்கே கட்டப்பட்டது.
- சாகரா மற்றும் மரகுடிகா இடையேயான இந்தப் பாலம் 2.44 கி.மீ நீளமும் 16 மீட்டர் அகலமும் கொண்டது.
- சுதர்சன் சேது (ஒகா-பேட் துவாரகா சிக்னேச்சர் பாலம் என்றும் அழைக்கப்படுகிறது), ஆனது ஒகா நிலப்பகுதியையும் குஜராத்தில் உள்ள பெய்ட் துவாரகா தீவையும் இணைக்கும் இந்தியாவின் மிக நீளமான கம்பிவட தாங்கு பாலமாகும்.
- அடல் சேது (மும்பை துறைமுக இணைப்பு) இந்தியாவின் மிகவும் நீளமான பாலம் மற்றும் நாட்டின் மிகவும் நீளமான கடல் பாலமாகும்.

## 12,000 புதிய வாக்குச்சாவடிகள் – பீகார்




- தேர்தல் ஆணையத்தின் பரிந்துரையின்படி, சிறப்புத் தீவிரத் திருத்தத்தின் (SIR) ஒரு பகுதியாக, அம்மாநிலத்தில் சுமார் 12,000க்கும் மேற்பட்ட புதிய வாக்குச் சாவடிகள் உருவாக்கப் பட்டுள்ளதாக பீகார் அரசு தெரிவித்துள்ளது.
- 12,817 புதிய வாக்குச்சாவடிகள் நிறுவப்பட்டப் பிறகு, மொத்த வாக்குச் சாவடிகளின் எண்ணிக்கை 77,895 என்பதில் இருந்து 90,712 என்பதாக உயர்ந்துள்ளது.
- 1,200 அல்லது அதற்கும் குறைவான வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச் சாவடி என்ற இலக்கை அடைந்த நாட்டின் முதல் மாநிலமாகவும் பீகார் மாறியுள்ளது.
- முன்னர், ஒரு வாக்குச்சாவடிக்கு 1,500 வாக்காளர்கள் என்ற உச்ச வரம்பு இருந்தது.
- சிறப்புத் தீவிர திருத்தத்தின் கீழ், இது 1,200 ஆக திருத்தப்பட்டுள்ளது.
- நீண்ட வரிசைகளைக் குறைத்து வாக்களிப்பதை மிகவும் வசதியாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி நீட்டிப்பு

- மணிப்பூரில் 356வது சரத்தின் கீழ் குடியரசுத் தலைவர் ஆட்சி 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 ஆம் தேதி முதல் ஆறு மாதங்களுக்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சர் மக்களவையில் அறிமுகப்படுத்திய ஒரு சட்டப்பூர்வத் தீர்மானத்தைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

- அரசியலமைப்பின் 356(3) என்ற சரத்தின் கீழ், குடியரசுத் தலைவர் ஆட்சி ஆளுநர் அலுவலகம் மூலம் செயல்படுத்தப்படுகிறது.
- இது வழக்கமாக ஆறு மாதங்களுக்கு நீடிக்கும் மற்றும் பாராளுமன்றத்தின் ஒப்புதலுடன் ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் இது புதுப்பிக்கப்படலாம்.
- இது அதிகபட்சமாக மூன்று ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படும்.
- 2027 ஆம் ஆண்டு வரை பதவிக் காலம் கொண்ட மணிப்பூர் மாநிலச் சட்டமன்றம் இடை நிறுத்தம் செய்யப் பட்டுள்ளது.
- மணிப்பூரின் முதல்வர் N. பிரேன் சிங் இராஜினாமா செய்ததைத் தொடர்ந்து இந்த ஆண்டு பிப்ரவரி 13 ஆம் தேதி மணிப்பூரில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமல்படுத்தப் பட்டது.
- 2023 ஆம் ஆண்டு மே மாதம் முதல் மணிப்பூரில் மெய்தே சமூகம் மற்றும் குகி-சோ சமூகங்களுக்கு இடையே இன மோதல் ஏற்பட்டு வருகிறது.




# முக்கிய தினங்கள்


## உலக ஆட்கடத்தல் எதிர்ப்பு/தடுப்பு தினம் 2025 – ஜூலை 30

- ஆட்கடத்தலால் பாதிக்கப்பட்டவர்களின் நிலைமை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதையும் அவர்களின் உரிமைகளை மேம்படுத்துவதையும் பாதுகாப்பதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 2020 முதல் 2023 வரை, உலகளவில் 200,000க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்டவர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- 2025 ஆம் ஆண்டிற்கான கருப்பொருள் "Human trafficking is organized crime – End the exploitation." என்பதாகும்.




## ஷாஹித் உதம் சிங்கின் தியாக தினம் 2025 - ஜூலை 31





- ஏப்ரல் 13, 1919 அன்று, ரவுலட் சட்டத்தை எதிர்த்து ஏராளமான இந்தியர்கள் ஜாலியன் வாலாபாக்கில் கூடினர்.
- இந்த நாளில், பிரிகேடியர்-ஜெனரல் டயரின் கீழ் ஆங்கிலேயப் படைகள் எவ்வித எச்சரிக்கையும் இல்லாமல் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.
- ஜெனரல் டயர் தனது துருப்புக்களை, மக்கள் வெளியேறும் வழிகளைத் தடுத்து, கண்மூடித்தனமாக சுமார் 10 நிமிடங்கள் துப்பாக்கிச் சூடு நடத்த உத்தரவிட்டார்.
- ஆயிரக்கணக்கான நிராயுதபாணியான பொது மக்கள் கொல்லப்பட்ட இந்தப் படுகொலையின் கொடூரத்தை ஷாஹித் உதம் சிங் நேரில் கண்டார்.

- 1919 ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குப் பழிவாங்கும் விதமாக 1940 ஆம் ஆண்டு லண்டனில் உதம் சிங் மைக்கேல் ஓ'டயரை சுட்டுக் கொன்றார்.
- உடனடியாக கைது செய்யப்பட்ட சிங் ஒரு சிறிய விசாரணைக்குப் பிறகு, ஜூலை 31, 1940 அன்று லண்டனின் பென்டன்வில் சிறையில் தூக்கிலிடப்பட்டார்.

# இதரச் செய்திகள்

## இந்தியாவில் தீண்டாமை வழக்குகள் 2025




- 1955 ஆம் ஆண்டு உரிமையியல்/குடிமை உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (PCR சட்டம்) கீழ் பதிவு செய்யப்பட்ட "தீண்டாமை" தொடர்பான குற்ற வழக்குகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.
- நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள் 97 சதவீதத்திற்கும் அதிகமாக இருப்பதாலும், கிட்டத்தட்ட அனைத்து விசாரிக்கப்பட்ட வழக்குகளும் விடுதலை அளிப்பதாலும் இது அதிகரித்துள்ளது.
- இந்த அறிக்கை சமீபத்தில் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது.
- சமூக மற்றும் மதத் துறைகள் உட்பட தீண்டாமையின் பல்வேறு வெளிப்பாடுகளை வரையறுத்து, தண்டனைகளைப் பரிந்துரைப்பதே இந்தச் சட்டத்தின் நோக்கமாகும்.
- வழக்குப் பதிவு, காவல்துறை மற்றும் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகள், சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் காவல் நிலையங்களை நிறுவுதல், சாதி மறுப்புத் திருமண ஊக்கத்தொகை போன்ற அம்சங்களை உள்ளடக்கிய மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் தலையீடுகளுடன் கூடிய வருடாந்திர மறுஆய்வு அறிக்கையை இது கட்டாயமாக்குகிறது.
- தேசிய குற்றப் பதிவு வாரியத்திற்கு (NCRB) வழங்கப்பட்டத் தரவுகளின் படி, 2022 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் PCR சட்டத்தின் கீழ் மொத்தம் 13 வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன என்ற நிலையில் இது 2021 ஆம் ஆண்டில் 24 ஆகவும் 2020 ஆம் ஆண்டில் 25 ஆகவும் இருந்தது.
- இந்த வழக்குகள் ஜம்மு மற்றும் காஷ்மீர் (5), கர்நாடகா (5), மகாராஷ்டிரா (2) மற்றும் இமாச்சலப் பிரதேசம் (1) ஆகிய மாநிலங்களில் இருந்து பதிவாகியுள்ளன.

- இதற்கு நேர்மாறாக, 1989 ஆம் ஆண்டு பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பட்டியலிடப் பட்ட பழங்குடியினர் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்துள்ளது.
- 21 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களில் PCR சட்டத்தின் கீழ் 18,936 சாதி மறுப்புத் திருமண தம்பதிகளுக்கு தலா 2.5 லட்சம் ரூபாய் நிதி ஊக்கத்தொகை வழங்கப் பட்டதாகவும் 2022 ஆம் ஆண்டு அறிக்கை ஆவணப் படுத்தியுள்ளது.
- மகாராஷ்டிரா அதிகபட்சமாக 4,100 பயனாளிகளையும், அதைத் தொடர்ந்து கர்நாடகா (3,519) மற்றும் தமிழ்நாடு (2,217) பயனாளிகளையும் பதிவு செய்துள்ளது.
- இருப்பினும், பீகார், பஞ்சாப், உத்தரப் பிரதேசம் மற்றும் ஜார்க்கண்ட் உள்ளிட்ட பல மாநிலங்கள் கலப்புத் திருமண ஊக்கத்தொகை தொடர்பானத் தரவுகளை வழங்க வில்லை.

## 2025 ஆம் ஆண்டில் ஆடம்பரச் செலவுகளுக்கான மிகவும் செலவு மிகுந்த நகரங்கள்




- சுவிஸ் செல்வ மேலாண்மை நிறுவனமான ஜூலியஸ் பேர் குழுமத்தின் சமீபத்திய அறிக்கையின் படி இந்தத் தகவல் கூறப்பட்டுள்ளது.
- சிங்கப்பூர் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக ஆடம்பரச் செலவுகளுக்கான உலகின் மிகவும் செலவு மிகுந்த நகரமாக உள்ளது.
- இது ஹாங்காங் மற்றும் இலண்டன் போன்ற பிற பிரபலமான நகரங்களை முந்தி உள்ளது.
- இதற்கிடையில், இலண்டன் ஹாங்காங்கைப் பின்னுக்குத் தள்ளி இதில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- நியூயார்க் நகரம், முதல் 10 இடங்களைப் பிடித்த வடக்கு அல்லது தென் அமெரிக்காவில் உள்ள ஒரே நகரமாக இப்பட்டியலில் எட்டாவது இடத்தைப் பிடித்தது.

## டோக்லாமில் சுற்றுலா

- இந்தியா-சீனா மோதல் நடைபெற்ற எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு சிக்கிமில் உள்ள டோக்லாம் 2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் சுற்றுலாப் பயணிகளுக்கு அனுமதியளிக்க உள்ளது.
- இந்தியா, பூடான் மற்றும் சீனா சந்திக்கும் இடத்தில், காங்டாக்கிலிருந்து 68 கி.மீ

தொலைவில் உள்ள இது கடல் மட்டத்திலிருந்து 13,780 அடி உயரத்தில் அமைந்துள்ளது.

- 2017 ஆம் ஆண்டில் சீனா பூடானின் உரிமை கோரப்பட்ட நிலத்தில் சாலை அமைக்க முயன்ற போது டோக்லாம் ஒரு பதட்டம் நிறைந்த பகுதியாக மாறியதால், இந்தியா பூடானுக்கு உதவ முன்வந்தது.
- பாதுகாப்புத் துறை அமைச்சகமானது முக்கியமான இராணுவ தளங்களைக் காட்சிப் படுத்துவதற்காக சிக்கிமில் உள்ள மூன்று போர்க்களச் சுற்றுலா இடங்களில் ஒன்றாக டோக்லாம் பகுதியைத் தேர்வு செய்துள்ளது.
- மற்ற இரண்டு இடங்கள் 1967 ஆம் ஆண்டில் இந்தியாவும் சீனாவும் மோதிக் கொண்ட நாது லா மற்றும் சோ லா ஆகியனவாகும்.





## இந்தியாவில் நீதிமன்ற வழக்குகள் 2025

- 2023 ஆம் ஆண்டில், உச்ச நீதிமன்றத்தில் 86,700 வழக்குகள் நிலுவையில் உள்ளன.
- உயர் நீதிமன்றங்களில் 65.3 லட்சத்திற்கும் அதிகமான வழக்குகளும், மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங்களில் 4.4 கோடி வழக்குகளும் நிலுவையில் உள்ளன.
- கடந்த ஆண்டு, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு இதனை நீதி வழங்கலைத் தடுக்கும் 'இடை நிறுத்த வழக்கு' என்று விமர்சித்தார்.
- மாவட்ட நீதித்துறையின் தேசிய மாநாட்டில் உரையாற்றிய திரௌபதி முர்மு, நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் நீண்டகாலப் பிரச்சினையைக் கவனத்தில் கொள்ள 'black coat syndrome - கருப்பு அங்கி நோய்க்குறி' என்ற ஒரு சொற்றொடரை உருவாக்கினார்.
- அவர் அதை மருத்துவமனைகளில் நோயாளிகள் உணரும் 'வெள்ளை அங்கி நோய்க் குறி'யுடன் ஒப்பிட்டார்.
- இந்தியாவில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 5.1 கோடி வழக்குகளாக உள்ளது.
- 20,400 குற்றவியல் வழக்குகளுடன் ஒப்பிடும்போது உச்ச நீதிமன்றத்தில் சுமார் 1,300 உரிமையியல் வழக்குகள் மட்டுமே நிலுவையில் உள்ளன.
- இதற்கிடையில், நிலுவையில் உள்ள வழக்குகளில் சுமார் 68.3 சதவீதம் உரிமையியல் வழக்குகள் என்பதால் உயர் நீதிமன்றங்கள் இதில் இன்னும் பெரிய ஏற்றத்தாழ்வை எதிர்கொள்கின்றன.

- இதே போல், மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றங்கள் நிலுவையில் உள்ள வழக்குகளில் 70 சதவீதத்தை உரிமையியல் வழக்குகளாகும்.
- இந்த ஏற்றத்தாழ்வு, சிக்கலானச் சொத்துக்கள், குடும்பம் அல்லது வணிக தகராறுகளை உள்ளடக்கிய உரிமையியல் வழக்குகள், ஒவ்வொரு மட்டத்திலும் உள்ள ஒரு முறையான சிக்கலை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.
- உயர் நீதிமன்றங்கள் 85.3% குற்றவியல் வழக்குகளை முடித்து வைப்பதில் முன்னிலை வகிக்கின்றன அதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றமும் (80.9%), மாவட்ட நீதிமன்றங்களும் (79.5%) உள்ளன.
- இருப்பினும், மாவட்ட நீதிமன்றங்களில் உரிமையியல் வழக்குகளைப் பொறுத்த வரையில், 2023 ஆம் ஆண்டில் நிலுவையில் உள்ள வழக்குகளில் 18.8% என்ற அளவு மட்டுமே தீர்த்து வைக்கப் பட்டன என்ற நிலையில், அங்கு ஆண்டுதோறும் 20% புதிய வழக்குகள் மட்டுமே தொடுக்கப்படுகின்றன என்பதோடு மேலும் சுமார் 20% என்ற அளவிலான வழக்குகள் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் அங்கு நீடிக்கின்றன.
- மாவட்ட நீதிமன்றங்களில் உள்ள உரிமையியல் வழக்குகள் மிக நீண்ட தாமதங்களை எதிர்கொள்கின்றன.
- வழக்குகளின் எண்ணிக்கைக்கும், நீதிமன்றங்களின் எண்ணிக்கைக்கும் இடையே உள்ள முரண்பாட்டை இது வெளிப்படுத்துகிறது.
- இந்தியாவின் நீதித்துறைச் செயல்பாடுகள் அனுமதிக்கப்பட்ட 27,363 பதவிகளில் 18,297 அல்லது 66.86% என்ற அளவில் மட்டும் உள்ளன.
- இங்கு 9,065 பதவிகள் காலியாக உள்ளன இதன் விளைவாக 33% என்ற அளவிற்கு பற்றாக்குறை ஏற்படுகிறது.
- உரிமையியல் வழக்குகளுக்கான பதவிகள் உட்பட காலியாக உள்ள மாவட்ட மற்றும் கீழமை நீதிமன்றப் பதவிகள், அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் 25,771 நீதிபதிகளைக் கொண்டுள்ளன.
- சராசரியாக 10 லட்சம் மக்கள்தொகைக்கு 18 நீதிபதிகள் வீதம் உள்ளது.
- இது சீனாவின் 10 லட்சம் மக்கள்தொகைக்கு 145 நீதிபதிகள் என்ற நிலையை விடக் குறைவாகும்.
- நீதித்துறைப் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு, இந்தியா 9,065 காலியிடங்களை நிரப்ப வேண்டும். இது நிலுவையில் உள்ள வலுக்குகளைக் குறைக்க உதவும்.
- 10 லட்சம் மக்கள்தொகைக்கு 50 நீதிபதிகள் என்ற சட்ட ஆணையத்தின் பரிந்துரை பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டுள்ளது.
- ஆனால் இந்தியா 10 லட்சம் மக்கள்தொகைக்கு 15 நீதிபதிகளுடன் மட்டுமே செயல்படுகிறது.
- லோக் அதாலத்கள், நடைமுறைச் சீர்திருத்தங்கள், மாற்றுத் தகராறு தீர்வு (ADR) மற்றும் எண்ணிமமயமாக்கல் ஆகியவை நீதித்துறையின் சுமையைக் குறைக்க ஒரு பயனுள்ள வழியாகும்.
- லோக் அதாலத்கள் விரைவான, மிகவும் மலிவான மற்றும் அணுகக் கூடிய நீதியை வழங்குகின்றன.
- மத்தியஸ்தம், நடுவர் மன்றம் மற்றும் சமரசம் போன்ற இதர பிற மாற்றுகள், பாரம்பரியமாக நீதிமன்ற அறைக்கு வெளியே தகராறுகளைத் தீர்ப்பதற்கு மிகவும் பொருத்தமான மாற்றுகளாகும்.
- நிலுவையில் உள்ள 5.1 கோடி வழக்குகளுடன் ஒப்பிடும் போது 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையில் 13.2 கோடி வழக்குகள் தீர்க்கப்பட்டுள்ளதுடன் தேசிய லோக் அதாலத்களின் (NLA - National Lok Adalats) வெற்றி அனைத்து மட்டங்களிலும் ஒரே

நேரத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

❖ NLA அமைப்புகள் சுமார் 3.34 கோடி உரிமையியல் வழக்குகளையும், 1.96 கோடி முன் விசாரணையில் இருந்த குற்றவியல் வழக்குகளையும், 3.34 கோடி நிலுவையில் இருந்த நீதிமன்ற வழக்குகளையும் தீர்த்து வைத்துள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★